செ.வெ.எண்:03 நாள்:02.12.2017

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவிலில் மாவட்ட நீர்வடிப் பகுதி முகமை, பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1,12,395 லட்சம் மதிப்பில் 15 விவசாயிகளுக்கு விசைத்தெளிப்பான் மற்றும் ரூ.2,03,458 லட்சம் மதிப்பில் 23 பயனாளிகளுக்கு தையல் இந்திரங்களையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலகத்தில் மாவட்ட நீர்வடிப் பகுதி முகமை, பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விசைத்தெளிப்பன் மற்றும் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (02.12.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ரூ.1,12,395 லட்சம் மதிப்பில் 15 விவசாயிகளுக்கு விசைத்தெளிப்பாணையும் மற்றும் ரூ.2,03,458 லட்சம் மதிப்பில் 23 பயனாளிகளுக்கு தையல் இந்திரங்களையும் வழங்கினார்கள்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்கள் வாழ்வாதாரங்கள் உயரும் வகையில் எண்ணற்ற திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. வேளாண்மை துறைக்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு விசைத்தெளிப்பான் வேளாண்மை இயந்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட நீர்வடிப் பகுதி முகமை, பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1,12,395 லட்சம் மதிப்பில் 15 பயனாளிகளுக்கு விசைத்தெளிப்பான் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இவ் அரசு தேவையானவற்றை செய்து தரும். விவசாயிகள் அரசு வழங்கும் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்கையில் உயர வேண்டும். திருநெல்வேலியில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றதற்கு காரணமாக இருந்த அனைத்துத்துறை அலுவலர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.என பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

விவசாயிகளின் வளர்ச்சிக்கு வேளாண்மைத்துறை மூலமாக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நீர்வடிப் பகுதி முகமை, பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமானது விவசாய நிலங்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தி தருதல், பண்ணை கூட்டம் அமைப்பது மூலம் மழைகாலங்களில் சேமித்து வைத்த நீரானது நீர் பற்றாக்குறை காலங்களில் விவசாயிகளுக்கு உதவும் வீதமாக உள்ளது. பைப்லயன் அமைத்து தண்ணீர் வழங்குவதன் மூலம் அனைவருக்கும் போதுமான தண்ணீர் கிடைக்க உதவுகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக இரண்டு

மாணவர்கள் தங்கும் விடுதி கட்டப்படவுள்ளது. மேலும் பழுதடைந்துள்ள மாணவர்கள் தங்கும் விடுதிகள் புதுபிக்கப்படவுள்ளது. அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். அரசு செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. என பேசினார்.

அதனை தொடர்ந்து சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.8.00 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இராஜபாளையம் ரோடு நீதிமன்ற அருகில் பயணியர் நிழற்குடையினையும் ரூ.7.00 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சங்கரன்கோவில் நகராட்சி 15வது வார்டில் புதிய நியாய விலைக்கடை, மற்றும் பாரதி நகர் களப்பாக்குளம் ரூ.8.60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையினையும் ரூ.9.95 லட்சம் மதிப்பில் சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண்:18 கக்கன் நகர் கிழக்கு பகுதி (தென்வடல்) தார்ச்சாலை ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் வேளாண்மைத்துறை திரு.செந்தில்வேல் முருகன், விரிவாக்க அலுவலர் திரு.கஜந்திரபாண்டியன், நீர்பிடிப்பு வளர்ச்சி உறுப்பினர்கள் திரு.கருப்பசாமி, திரு.சதீஷ்குமார், திருமதி.இந்துமதி, திரு.மாரியப்பன், மற்றும் பொன்சேகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, முக்கிய பிரமுகர்கள் திரு.கண்ணன் (எ) ராஜூ, திரு.தச்சை கணேச ராஜா, திரு.ஆவின் ராமேஷ், திரு.சுப்பையா பாண்டியன், திரு.ஆறுமுகம் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.